வாக்களிப்பதன் அவசியம் குறித்து

# மெட்ரோ ரயிலில் கலை நிகழ்ச்சி



சென்னை, மார்ச் 27: வாக்களிப்பதன் அவசியம் குறித்து மெட்ரோ ரயிலில் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நாளை நடக்கிறது.

இதுகுறித்து மெட்ரோ ரயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், ஆன் திஸ்டீரிட் ஆப் சென்னை கலைக்குழுவினருடன் இணைந்து நடத்தும் மெல்லிசை விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி நாளை மாலை 5 மணி முதல் 7 மணி வரை விம்கோ நகர் மெட்ரோ ரயில் நிலையத்திலிருந்து, சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையம் வரை மற்றும் சென்ட்ரலில் இருந்து விமான நிலையம் மெட்ரோ வரை செல்லும் மெட்ரோ ரயிலில் நடக்கிறது. இதில், வரும் சட்டசபை தேர்தலில் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

மேலும், பாரதியார் சிலம்பம் பயிற்சி மையத்துடன் இணைந்து மாலை 5 மணி முதல் 6 மணி வரை சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் வாக்களிப்பதன் அவசியம் மற்றும் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு குறித்த பல்சுவை விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடக்கிறது.

கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காகவும், அனைத்து பயணிகளின் பாதுகாப்பான பயணத்திற்காகவும் மெட்ரோ ரயில் நிலையங்களில் நுழைவதற்கும், மெட்ரோ ரயிலில் பயணிப்பதற்கும் அனைத்து பயணிகளும் கட்டாயம் முகக்கவசம் அணிந்திருப்பதுடன் தனிமனித இடைவெளியை கடைபிடித்து பயணம் செய்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மேலும் இந்த கொரோனா பரவல் தடுப்பு மற்றும் வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகளை கண்டுகளித்து விழிப்புணர்வுடன் இருக்குமாறு மெட்ரோ ரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு கூறப்பட்டுள்ளது.